# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 351/மா/2023**
**நாள் : 07.12.2023**

திருமதி. மா. பூச்சியம்மாள்
மதுரை- 11. – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
மண்டலம் - 3, (மத்தியம்),
மதுரை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

மதுரை மாவட்டம், வெங்கடாசலபுரம், பொன்மாரி நகர், க.எண்.26ல் வசிக்கும் திரு. மா. பூச்சியம்மாள் என்பவரின் 17.08.2023 நாளிட்ட மனு 02.09.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 351/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவுசெய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

மதுரை மாவட்டம், வெங்கடாசலபுரம், பொன்மாரி நகர், க.எண்.26ல் வசிக்கும் திரு. மா. பூச்சியம்மாள் என்பவரின் 17.08.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில்:-

நான் மேற்சொன்ன முகவரியில் என் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எங்கள் வீட்டின் முன்பகுதியில் தற்சமயம் வரை காலிமனையாக இருந்து வந்து தற்போது வீடாக கட்டியுள்ள கட்டிடத்தின் உரிமையாளர் திருமதி. சிவனம்மாள் கணவர் பெயர் பூமிநாதன், கதவு எண்.29, பொன்மாரி நகர், வெங்கடாசலபுரம், மதுரை – 11, குடிசை மாற்று வாரியத்தில் விண்ணப்பித்து கதவு எண்.26, பொன்மாரி நகர், வெங்கடாசலபுரம், மதுரை – 11 என்ற முகவரி கொண்ட வீட்டின் முன்பகுதியில் அமைந்துள்ள அவருடைய மனையிடத்தில் வீடு கட்டி முடித்து அவ்வீட்டினை வாடகைக்கும் விட்டுவிட்டார். மேற்படி சிவனம்மாள் தன் மனையிடத்தில் மூன்று அடுக்கு மாடி வீடு கட்டி முடித்து நான்காவது தளமும் கட்டியுள்ளார். மேலும் அவர் தனது வீட்டின் முன்புறத்தில் உள்ள 10 அடி சாலையில் 1 அடியினை முழுவதும் ஆக்கிரமித்து முழு கட்டிடமும் கட்டியுள்ளதோடு மேற்படி கட்டிடத்தின் வெளிப்புறமாக 2 அடி அகலத்திலும் 6 அடி நீளத்திலும் கூடுதலாக ஆக்கிரமிப்பு செய்து படிக்கட்டும் கட்டியுள்ளார். மேலும் தன் கட்டிடத்தில் 7 அடி உயரத்தில் 1–3/4 அடி அகலத்தில் சன் ஷேடும் அமைத்துள்ளார். இதனால் அப்பகுதி போக்குவரத்து நெரிசல் மிகுந்ததாகவும் மாறிவிட்டது. மேற்படி ஆக்கிரமிப்பு குறித்து கேள்வியெழுப்பினால் எங்களுடன் அவரும் அவரது கணவரும் மற்றும் மூன்று மகன்களும் சேர்ந்து கொண்டு சண்டைக்கு வருகிறார்கள். மேலும் சாதியை சொல்லி திட்டியதாக பொய் வழக்கு கொடுப்பேன்

என்றும் மிரட்டுகிறார்கள். மேற்படி மூன்று தளங்கள் கட்டுவதற்கும் சிவனம்மாள் மதுரை மாநகராட்சி வசம் எவ்வித அனுமதியும் பெறவில்லை.

நான் ஏற்கனவே கடந்த 07.03.2023 அன்று ஆணையர் மற்றும் உதவி ஆணையாளர், மதுரை மாநகராட்சி, மண்டலம் எண்.3ல் இது குறித்து புகார் அனுப்பியிருந்தேன். மேற்படி புகாரில் எவ்வித நடவடிக்கையும் தற்போது வரை எடுக்கப்படாததால், மேற்படி சிவனம்மாள் அவரது கணவர் பூமிநாதன் ஆகிய இருவரும் மேலும் ஊக்கமடைந்து நாங்கள் மிகவும் செல்வாக்குடையவர்கள் என்றும் சொல்லி தொடர் ஆக்கிரமிப்பில் ஈடுபட்டு வருவதோடு, மேற்படி ஆக்கிரமிப்பு குறித்து கேள்வியெழுப்பினால் அவரும் அவரது கணவர் மற்றும் மூன்று மகன்களும் சேர்ந்து கொண்டு எங்களோடு சண்டைக்கு வருகிறார்கள்.

ஆகவே சமூகம் ஐயா அவர்கள் தலையிட்டு குடிசை மாற்று வாரிய விதிமுறைகளுக்கு எதிராக நான்கு அடுக்கில் பொதுப் பாதையை ஆக்கிரமித்து வீடு கட்டியும் பொதுப்பாதைக்கும் ரோட்டிற்கும் இடையூறு ஏற்படுத்தி வருகிற மேற்படி சிவனம்மாள் மீது உரிய நடவடிக்கை எடுக்கவும், எனது புகாரின் மீது நடவடிக்கை எடுக்க தவறிய மண்டலம் - 3ன் உதவி ஆணையாளர், மீது உரிய நடவடிக்கை எடுக்கவும் தகுந்த அதிகாரிகளுக்கு தாங்கள் உத்திரவிடும்படி பணிந்து வேண்டுகிறேன்.

**மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு 16.11.2023 நாளிட்ட இம்முறைமன்ற கடிதத்தில் மதுரை மாநகராட்சி உதவி ஆணையரிடம் கோரப்பட்டது. அவர் தனது 22.11.2023 நாளிட்ட அறிக்கையில் :**

மதுரை மாநகராட்சி, மண்டலம் எண்.3, வார்டு எண்.75, வெங்கடாசலபுரம் பொன்மாரி நகர், கதவு எண்.29ல் குடிசை மாற்று வாரியத்திடமிருந்து பெறப்பட்டு தற்போது சிவனம்மாள் பெயரில் உள்ள பட்டா இடத்தில் கட்டப்பட்டுள்ள கட்டிடமானது 20' 9" x 14' 0" என்ற மனை அளவில் உள்ள கட்டிடத்திற்கு மாநகராட்சி மூலம் உரிய அனுமதி பெறாமல் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக "அனைவருக்கும் வீடு" என்ற திட்டத்தின் கீழ் பின்வரும் அளவுகளின்படி :-

"தரைத்தளம் - 16'9" x 14'0" (RCC)ல் முதல் தளம் - 16' 9" x 14'0" (RCC); மற்றும் இரண்டாம் தளம் - 16'9" x 14'0" (AC Sheet) கட்டப்பட்ட அனுமதியற்ற கட்டிடத்திற்கு 296 (1) & (2) நோட்டீஸ் 30.11.2017 அன்று வழங்கப்பட்டு மதுரை மாநகராட்சி மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 01.10.2017ம் தேதி முதல் கட்டிட உரிய அளவிற்கு வரிவிதிப்பு மற்றும் அனுமதியற்ற கட்டிடத்திற்கான தொகை வசூல் செய்யப்பட்டு வருகின்றது.

22.11.2023 அன்று நில அளவையர் மூலம் அளவீடு செய்யப்பட்டதில் சிவனம்மாள் கட்டிடத்தில் எவ்வித ஆக்கிரமிப்பும் இல்லை. மேலும் சர்வே வார்டு எண்.6, சர்வே பிளாக் 30, நகர புல எண்.118ல் உள்ள 3.00 மீட்டர் அகலம் கொண்ட மாநகராட்சி தெருவில் சிவனம்மாள் அவர்கள் வீட்டின் முன்பு படிக்கட்டு 0.60m x 3.00m (2'0" x 10'0") என்ற அளவில் கட்டி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது என்று நில அளவையர் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது மற்றும் பூச்சியம்மாள் அவர்கள் கட்டிடத்தில் எவ்வித ஆக்கிரமிப்பும் இல்லை; வீட்டின் கழிவறை ஆய்வு தொட்டி 0.45m x 0.45m (1' 6" x 1'6") என்ற அளவில் மாநகராட்சி சாலையில் உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

**முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 23.11.2023 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 16.11.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 23.11.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"மதுரை வெங்கடாசலபுரம், பொன்மாரி நகர், கதவு எண்.26ல் உள்ள காலிமனை இடத்தை பூமிநாதனின் மனைவி திருமதி சிவனம்மாள் என்பவர் குடிசை மாற்று வாரியத்தினால் அளிக்கப்பட்ட இடத்தில் திட்ட அனுமதி ஏதுமின்றி 3 மாடி கட்டடம் கட்டியுள்ளார். மேற்கண்ட கட்டடத்தின் வெளிப்புறமாக உள்ள இடத்தை ஆக்கிரமித்து திண்டு மற்றும் படிக்கட்டுகளை அமைத்துள்ளார். மேற்கண்ட ஆக்கிரமிப்பினால் அங்குள்ள பொதுப்பாதையை பயன்படுத்தி எங்களது வீட்டிற்கு சென்று வருவதற்கு சிரமமாக உள்ளது. இது குறித்து மதுரை மாநகராட்சி அலுவலர்களிடம் மனு அளித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே, மேற்கண்ட திருமதி சிவனம்மாள் என்பவர் மேற்கண்ட முகவரியில் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ள திண்டு மற்றும் படிகட்டுகள் ஆகியவற்றை அகற்றிடவும் அங்குள்ள பொதுப்பாதையை நாங்கள் எளிதாக பயன்படுத்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். இந்நேர்வு தொடர்பான வீடியோ காட்சிகளை இம்முறை மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கிறேன்.

மேலும், 17.08.2023 நாளிட்ட எனது மனுவில் உள்ள விவரங்களையும் என்னுடைய மேல்வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்'' எனத் தெரிவித்துள்ளார்.

**மதுரை மாநகராட்சியின் உதவி செயற்பொறியாளர் (திட்டம்) 23.11.2023 அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகி தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார். அதில்:-**

"மனுதாரரிடமிருந்து பெறப்பட்ட மனுவையொட்டி, மனுவில் கண்டுள்ள இடம் தள ஆய்வு செய்யப்பட்டது. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக "அனைவருக்கும் வீடு'' என்ற திட்டத்தின் கீழ் பெறப்பட்டு, திருமதி சிவனம்மாள் என்பவர் கட்டடம் கட்டியுள்ளார். மேற்கண்ட அனுமதியற்ற கட்டிடத்திற்கு 296 (1) மற்றும் (2) பிரிவின் கீழ் 30.11.2017 அன்று நோட்டீஸ் வழங்கப்பட்டது. 01.10.2017 முதல் மேற்கண்ட அனுமதியற்ற கட்டிடத்திற்கு வரிவிதிப்பு மற்றும் அனுமதியற்ற கட்டிடத்திற்கான தொகை வசூல் செய்யப்பட்டு வருகிறது என்பதையும், மேலும் மேற்கண்ட நோட்டீஸ் அளித்த பின்னர் அதன் தொடர் நடவடிக்கை மாநகராட்சியால் எடுக்கப்படவில்லை என்றும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் 22.11.2023 அன்று அளவீடு செய்யப்பட்டதில் மனுதாரர் தனது மனுவில் தெரிவித்துள்ள திருமதி சிவனம்மாள் கட்டடத்தில் எவ்வித ஆக்கிரமிப்பும் இல்லை. ஆனால் அவரது வீட்டின் படிகட்டு ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ளது என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இம்முறை மன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்படும் மதுரை மாநகராட்சி, மண்டலம்-3ன் உதவி ஆணையரின் 22.11.2023 நாளிட்ட அறிக்கையில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படியும் தெரிவித்து இந்நேர்வு குறித்த புகைப்படங்களையும் இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்'' எனத் தெரிவித்துள்ளார்.

**இந்நேர்வில், மனுதாரரின் மனு, வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரின் வாக்குமூலம் மற்றும் அறிக்கை ஆகியவை கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் தெரிய வருகின்றன.**

மனுதாரர் தன்னுடைய வீட்டிற்கு முன்பகுதியில் வெங்கடாசலபுரம், பொன்மாரி நகர், கதவு எண்.26ல் காலிமனையாக இருந்த இடத்தை சிவனாம்மாள் என்பவர் குடிசை மாற்று வாரியத்தில் விண்ணப்பித்து வீடு கட்டும்போது தன்னுடைய வீட்டிற்கு முன்புறம் உள்ள 10 அடி சாலையில் 1 அடி வரை ஆக்கிரத்தும் கட்டியதோடு அல்லாமல், அக்கட்டிடத்திற்கு வெளிப்புறமாக 2 அடி அகலத்திலும், 6 அடி நீளத்திலும் ஆக்கிரமித்தும். 1-3/4 அடி அகலத்திற்கு படிகட்டும் கட்டி ஆக்கிரமித்துள்ளார் எனவும் மதுரை மாநகராட்சி மண்டலம்–3ன் அலுவலகத்தில் இது குறித்து புகாராக தெரிவித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று தெரிவித்து தன் மனு மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள இடம் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக "அனைவருக்கும் வீடு" என்ற திட்டத்தின் கீழ் பெறப்பட்டு திருமதி.சிவனம்மாள் என்பவர் கட்டடம் கட்டியுள்ளார் என்றும், மேற்கண்ட அனுமதியற்ற கட்டிடத்திற்கு மதுரை மாநகராட்சி சட்டம் 1971 பிரிவுகள் 296 (1) மற்றும் (2) பிரிவின் கீழ் 30.11.2017 அன்று தாக்கீது வழங்கப்பட்டது என்றும், அதன் பிறகு தொடர் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், ஆனால் அனுமதியற்ற கட்டடத்திற்கான அபராத தொகை வசூல் செய்யப்பட்டு வருகிறது என்றும், மேலும் திருமதி. சிவனம்மாள் என்பவருக்கு சொந்தமான கட்டடம் 22.11.2023 அன்று அளவீடு செய்யப்பட்டதில் அக்கட்டிடத்தில் எவ்வித ஆக்கிரமிப்பு இல்லையென்றும், ஆனால் அவரது வீட்டிற்கு முன்புறம் படிகட்டு கட்டப்பட்டு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது என்றும் மதுரை மாநகராட்சி மண்டலம்–3ன் உதவி ஆணையர் தன்னுடைய அறிக்கையிலும், உதவி செயற்பொறியாளர் திட்டம் (பொறுப்பு) தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்கள்.

மதுரை, பொன்மாரி நகர், செங்கடாசலபுரம் கதவு எண் 26ல் அனுமதியின்றி திருமதி சிவனம்மாள் அவர்களால் கட்டப்பட்ட கட்டடத்திற்கு 30.11.2017 அன்று தாக்கீது வழங்கிவிட்டு அதன்பிறகு எவ்விதமான தொடர் நடவடிக்கையும் எடுக்காமல் இருந்தது மதுரை மாநகராட்சி மண்டலம்–3ன் அலுவலர்களின் மெத்தனப்போக்கே காரணம் என்று இம்முறைமன்றம் சுட்டிகாட்ட விரும்புகிறது. இது வன்மையாக கண்டிக்கத்தக்கது. மனுதாரர் மேற்கண்ட அனுமதியின்றி கட்டடப்பட்ட கட்டடம் குறித்து புகார் மனு அளித்தவுடன் உடனடியாக நடவடிக்கை எடுக்க மதுரை மாநகராட்சி உதவி ஆணையர் உத்திரவிட்டு இருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு செய்யாதது உதவி ஆணையர் தன்னுடைய கடமையிலிருந்து தவறிவிட்டதாக இம்முறைமன்றம் கருதுகிறது.

2014-ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் மற்றும் விதிகளில், குறிப்பாக:-

<u>பிரிவு 7</u> The Ombudsman shall perform all or any of the following functions, namely-

(i) enquire into any written complaint from the Government or that has come to the notice of the Ombudsman in which corruption or maladministration of a public servant or a local body is alleged;

(ii) Pass an order on the proved allegation in the following manner, namely-

(a) xxxx

(b) xxxx

(c) where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules

மற்றும்

<u>பிரிவு: 12</u>(1) The ombudsman may consider and dispose of complaints other than those involving criminal offences, in the following manner, namely-

(a) x x x x

(b) x x x x

(c) refer the complaint to the appropriate authority to take disciplinary action for

wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body.

(d) x x x x

(e) x x x x

அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் இம்முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது.

மனுதாரர் புகார் மனு அளித்தவுடன் உடனடியாக நடவடிக்கை எடுக்காமல், 30.11.2017 அன்று மதுரை மாநகராட்சி சட்டம் 1971 பிரிவுகள் 296 (1) மற்றும் (2) பிரிவின் கீழ் தாக்கீது மட்டும் வழங்கிவிட்டு, தொடர் நடவடிக்கை எடுக்காத மதுரை மாநகராட்சி மண்டலம்–3ன் சம்மந்தப்பட்ட முன்னாள் மற்றும் இன்னாள் அலுவலர்களின் மீது உரிய துறை ரீதியான நடவடிக்கை எடுக்குமாறும், மேலும் மேற்கண்ட சிவனம்மாள் வீட்டின் முன்புறம் படிகட்டு ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ளது என்று, மதுரை மாநகராட்சி மண்டலம்-3ன் உதவி செயற்பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தது குறித்து உரிய சட்டபூர்வ நடவடிக்கை எடுக்குமாறும், அவ்வாறு எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து இம்முறைமன்றத்திற்கு 45 நாட்களுக்குள் அறிக்கை அனுப்பிவைக்குமாறும் மதுரை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 7–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திருமதி. மா. பூச்சியம்மாள்,
க/பெ. மாரிமுத்து (லேட்),
க.எண்.26, பொன்மாரி நகர்,
வெங்கடாசலபுரம், மதுரை – 627 011.

2. ஆணையர்,
மதுரை மாநகராட்சி.

3. உதவி ஆணையர், (ஆணையர் வழியாக)
மண்டலம்-3, (மத்தியம்),
மதுரை மாநகராட்சி,
மேல மாரட்ட வீதி, மதுரை – 625 001.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.

4. இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.

**நகல்**: மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்